## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூலை 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம், அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தம்பர் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம்

பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) 2020ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய செலவினத் தலைப்பு என்றமையால்,கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது,

(ஆ) கடந்த வருடத்தில் இந்த செலவினத் தலைப்பு அறிமுகப்படுத்தப்பட்டிருக்காத காரணத்தால் என்னால் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

அரச கணக்குகள் திணைக்கத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்கீட்டு வழிகாட்டி இலக்கம் 06 இன் 7(II) ஆம் பந்தியின் பிரகாரம் வேறு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் சேர்க்கப்படும் வருமானமானது வேறு பெறுகைகளாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்பட்டிருக்க வேண்டும். அமைச்சின் விரிவான பரீட்சை மீதியின் படி வேறு வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் உரிய வருமானங்கள் 6 குறியீடுகளின் கீழ் அமைச்சினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 13,452,010 ஆக இருந்தது. நிதி செயலாற்றுகைச் கூற்றில் அந்தப் பெறுகைகள் ரூபா 163,225,215 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 149,773,204 கூடுதலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப் பகுதிக்கு மட்டுமான ரூபா 13,452,010 ஆனது வேறு வருமானங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய வருமானம் சேகரித்தல் மட்டுமாகவே உள்ளதுடன் ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையான முழு ஆண்டுக்கும் உரியதான வேறு வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய வருமானம் சேகரித்தல் உள்ளிட்ட உரிய வேறு பெறுகைகளின் பெறுமதி ரூபா 163,225,215 ஆக இருப்பதால் குறிப்பிடல் சரியானதே ஆகும். | சுற்றறிக்கைகளின் அறிவுரைகளுக்கமைய சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரச கணக்கீட்டு வழிகாட்டல் இலக்கம் 06 இன் 7(vi)(ஆ) பந்தியின் பிரகாரம் வேறு அமைச்சு / திணைக்கள செலவு விடயங்கள் அல்லது ஏனைய பிரதான ஏடுகளில் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் வரவு பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அமைச்சினால் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்கல் கணக்கில் வேறு செலவு தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட செலுவு ரூபா 267,998,972,040 ஆக செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் மீதி சரிபார்த்தலுக்கமைய அந்த செலவு ரூபா 96,419,491,147 ஆனதால் வேறுபாடு ரூபா 173,579,480,873 ஆகும். | அமைச்சின் மீதி சரிபார்த்தலுக்கமைய ரூபா 96,419,491,147 ஆக குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் உள்ளக்கபடுவது செப்தெம்பர் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையான செலவு மட்டுமே. ரூபா 173,579,480,893 ஆன ஜனவரி மாதம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையான செலவுகளுடன் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 269,998,972,040 ஆக இருத்தல் சரியானதே. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேலே குறிப்பிடப்பட்ட வழிகாட்டலில் 7(vi)(ஆ) பந்தியின் பிரகாரம் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் அமைச்சின் ஏடுகளுக்கு அமையான எண்ணிக்கைகளுக்கிடையே வேறுபாடு இருக்கும் போது அந்த வேறுபாடு கட்டுநிதி சீராக்கல் கணக்கில் பொருத்துதல் வேண்டும். அமைச்சின் விரிவான பரீட்சை மீதி மற்றும் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றிற்கமைய முற்பணம் வழங்கல் மற்றும் பெறுவனவு முறையே ரூபா 25,868,251 மற்றும் ரூபா 15,332,319 ஆனதால் வேறுபாடு முற்பண ஒப்பீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட சீராக்கல் கணக்கில் ரூபா 1,737,593,475 இனைச் வரவாகவும் ரூபா 1,697,332,558 இனை செலவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | மேலே விபரிக்கப்பட்ட வகையில் 2020 ஆம் ஆண்டில் மொத்த முற்பணக் கொடுப்பனவு மற்றும் பெறுகை அடிப்படையாக கொண்டு கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், முறையே ரூபா 25,868,251 மற்றும் ரூபா 15,332,319 ஆன முற்பணக் கொடுப்பனவு மற்றும் பெறுகைகள் ஆண்டின் முதல் 08 மாதங்களுக்கான முற்பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டும் உரித்துடையதாகும். | - மேற்படி - |
| (ஈ) | அரச கணக்கீட்டு வழிகாட்டல் 06 இன் 7(vi)(அ) இற்கமைய அமைய கட்டுநிதி சீராக்கல் கணக்கில் செலவிற்கு வேறு அமைச்சு/திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 2008 இன் கீழ் இந்த அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவவினைக் குறிப்பிடல் வேண்டும். அமைச்சு சமர்பித்த கட்டுநிதி சீராக்கல் கணக்கில் அந்த செலவினம் ரூபா 27,826,870,233 ஆக செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் அமைச்சின் பரீட்சை மீதிக்கு அமைய அந்த செலவு ரூபா 96,419,491,147 ஆகும். அதற்கமைய ரூபா 68,592,620,914 குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | அரச கணக்கீட்டு வழிகாட்டலுக்கமைய நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் அந்த வேறு அமைச்சு / திணைக்களம் மேற்கொண்ட செலவுகள் முற்பண ஒப்பீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட வேண்டும். அதற்கமைய, இந்த அமைச்சிற்காக வேறு அமைச்சு மேற்கொண்ட செலவு ரூபா 27,826,870,233 ஆகும். கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 96,419,491,147 செலவினம் வேறு அமைச்சிற்காக ஆண்டின் இறுதி 04 மாத காலப்பகுதிக்காக இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவாகும். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (உ) மேலே குறிப்பிட்ட வழிகாட்டலில் 7(vi)(ஆ) இன் பிரகாரம் அமைச்சின் மற்றும் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றுக்கு அமைய வைப்புப் பெறுகை மற்றும் கொடுப்பனவிற்கு இடையே வேறுபாடு ஏற்படுமாயின் அது கட்டுநிதிக் கணக்கில் சீர் செய்யப்படல் வேண்டும். அமைச்சின் பரீட்சை மீதி மற்றும் திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் படி பெறுகை மற்றும் கொடுப்பனவு பெறுமதிகளுக்கடையே முறையே ரூபா 138,108,361 மற்றும் ரூபா 73,815,042 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வைப்புக் கணக்கின் மீதிகள் அமைச்சின் ஏடுகள் சிக்காஸ் மென்பொருள் பிரதி மற்றும் திறைசேரி கணணி அச்சுப் பிரதியுடன் பொருந்துவதுடன் கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டுநிதி சீராக்கல் கணக்கில் குறிப்பொன்று உள்ளடக்கப்படவில்லை. | - மேற்படி - |

**1.6.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் தலைப்பு 155 இன் கீழ் காணப்பட்ட சுதேச மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் தலைப்பு 420 இன் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சாக மாற்றமடைந்திருந்தது. இராஜாங்க அமைச்சு முன்னைய ஆண்டில் இல்லாத போதிலும், மீளாய்வு ஆண்டில் நிதி கூற்றுக்களில் முன்னை ஆண்டின் வருமானம் மற்றும் செலவினமாக, முன்னைய ஆண்டில் காணப்பட்ட தலைப்பு 155 இன் அமைச்சின் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டளவில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2020 ஓகஸ்ட் 09 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 2187/27 கொண்ட அதி விசேட வர்த்தமானிக்கு அமைய அமைச்சுக்களின் விடயம் பரப்பு திருத்தியமைக்கப்பட்டதுடன், இந்த அமைச்சும் புதிய செலவினத் தலைப்பின் கீழ் தாபிக்கப்பட்டது. நீங்கள் குறிப்பிட்டுள்ளது போன்று புதிய செலவினத் தலைப்பின் கீழ் கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br><br>அரச நிறுவனங்களில் இறுதிக் கணக்குகளை சமர்ப்பிப்பதற்குரிய, அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இற்கு ஏற்புடையதாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3 ஆம் பந்தியின் அறிவுறுத்தலுக்கு அமைய, அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 2020 ஆம் ஆண்டுக்கான இறுதிக் | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படுத்தல் வேண்டும். |

கணக்குக் கூற்று மற்றும் அதனோடு இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகளில் உள்ளடங்கிய பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

செலவினத் தலைப்பு வேறுபட்ட போதிலும், வருடாந்த செலவின மதிப்பீட்டின் தலைப்பு 155 இனுள் தெளிவாகப் பிரித்து வேறுபடுத்தக் கூடிய வகையில் எந்தவொரு செலவும் ஒன்றாக மேற்கொள்ளப்பட்டிராததால், இந்த ஒப்பீடு முழுமையாக சரியானதே ஆகும். கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் ஒரு சில அமைச்சுக்களுக்கு சரியாக இருப்பினும் இந்த அமைச்சிற்கு பொருத்த மற்றது என்பதை தெளிவு படுத்துகின்றேன்.

### 1.6.3 நிதிச் செயலாற்றல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **திறைசேரி கட்டு நிதி பெறுகை** | | |
| | 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் உள்ளபடியான 155 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் காணப்பட்ட கட்டுநிதி ரூபா 403,555,559 ஆக இருந்ததுடன் அந்தந் தொகையினை பேரேட்டுக் குறிப்பு மூலம் செலவினத் தலைப்பு 420 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தது. அந்தக் கட்டுநிதியினுள் அதிலிருந்து விலகிச் சென்ற அமைச்சுக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த | 2020 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் இறுதி வரையிலும் இந்த அமைச்சிற்கு திறைசேரியினால் கட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. கட்டு நிதி கணக்கு இலக்கம் 7002/0/0/0/449/20 மற்றும் 7003/0/0/0/44/20 இன் கீழாகும்.<br><br>கணக்காய்வு ஐயவினாவுடன் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுபடுத்தலுக்கு அமைய ஆண்டினுள் மேற்கூறிய | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டுநிதி ரூபா 22,343,734 தொகையும் உள்ளடக்கியுள்ளதால், தலைப்பு 420 இல் ரூபா 381,211,825 எஞ்சியிருந்தது. 2020 செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரையிலும் கிடைத்துள்ள கட்டுநிதி ரூபா 97,930,292,990 ஆனதுடன் இந்த தலைப்பு 420 இற்குக் கிடைக்கப் பெற்ற மொத்த கட்டுநிதிப் பெறுமதி ரூபா 98,311,504,814 ஆகும். நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 273,124,512,657 ஆக ரூபா 174,813,007,843 இனால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதிக் கணக்கு இலக்கத்தின் கீழ் கிடைத்த கட்டுநிதி தொகை மற்றும் வேறு மூலாதாரங்களினால் கிடைத்த தொகை உள்ளடங்கலாக அமைச்சின் மொத்தக் கட்டுநிதிப் பெறுகை ரூபா 273,124,512,657 ஆகும். | |

**(ஆ) கட்டுநிதி மீதி**

| | | |
|---|---|---|
| நிதி செயலாற்றுகைக் கூற்றுக்கமைய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி மீதியாக ரூபா 242,214,173,832 வரையிலும் இருந்த போதிலும் மேற்கூறியவாறு சரியான முறையில் சீர்படுத்துமிடத்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி மீதி ரூபா 67,251,392,785 ஆக இருத்தல் வேண்டும். | மேலே விபரிக்கப்பட்ட வகையில் வருடாந்த கட்டுநிதி மீதி ரூபா 242,214,173,832 ஆக குறிப்பிடப்பட்டுள்ளமை சரியானதே ஆகும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுத்தல் வேண்டும். |

### 1.6.4 நிதி நிலைமைக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கைத்தவிர்ப்பு பட்டியலின்படி கைத்தவிர்க்கப்பட்ட 176 பொருட்களுக்கான மொத்த கிரயம் ரூபா 3,987,094 ஆகும். ஆயினும், நிதி அல்லாத சொத்துக்களின் அகற்றலாக கணக்குகளுக்கு ரூபா 3,852,950 எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய | குறித்த வேறுபாடு சிகாஸ் கணணி ஒழுங்கு முறையில் பதிவினை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட குறைபாடு என்பதுடன் பின்னர் அது திருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய சரியான கைத்தவிர்ப்புக் கிரயம் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேறுபாடு ரூபா 134,144 ஆகும். | ரூபா 3,852,750 ஆக உள்ளதுடன் அமைச்சின் ஏடுகளில் இந்தப் பெறுமதி சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

### 1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான பரீட்சை மீதிக்கமைய பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகளைக் கைப்பற்றல் ரூபா 1,254,014 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,662,794,451 ஆக ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | செலவின விடய இலக்கம் 2102, 2103 இன் கீழ் கைப்பற்றல் தவிர ஏனைய அனைத்து மூலதன செலவு விடயங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பௌதீக சொத்துக்களின் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகளைக் கைப்பற்றலாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுத்தல் வேண்டும். |

### 1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கணக்கீட்டு உத்தியோத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்த வேண்டியதாக இருந்த போதிலும், அதன் பிராகரம் செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பினை | உள்ளக கணக்காய்வின் ஊடாக நிலவும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மீள மீளாய்வு செய்து அவ்வப்போது தேவையான அறிவுரைகளை வழங்கி நாளதுவரையாக்கல் இடம்பெறுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான வகையில் நிச்சயிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுகின்றது என்பது தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாவுக்குப் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (இ) | உள்ளக கணக்காய்வுப் பணியினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 1 மற்றும் 2 இன் கீழ் 6 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் முறையே ரூபா 1,900,000 மற்றும் ரூபா 70,100,000 ஆக ரூபா 72,000,000 ஆக மொத்த நிதியும் அதாவது நூற்றுக்கு நூறு சதவீதமும் எஞ்சியிருந்தது. | நாட்டின் நிலுவும் சீரற்ற நிலைமை, இராஜாங்க அமைச்சர் விலகியமை மற்றும் அலுவலகம் முறையாக இயங்காமையினாலும் மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் பதவியணியினை ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள சிக்களினால் செயற்றிட்ட நடவடிக்கைகள் தாமதமாதல் மட்டக்களப்பு பொது மக்கள் நூலகத்தினை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியினைக் கட்டடத் திணைக்களத்திடமிருந்து ஆண்டினுள் பெற்றுக் கொள்ள முடியாததால் நிதி சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கையில் நடைமுறைக்கு சாத்தியமான முறையில் தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 1 இன் கீழ் 5 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 29,940,000 நிதியில் ரூபா 18,340,272 அதாவது சதவீதமாக ஸ்ரீ 61 சதவீதம் எஞ்சியிருந்தது. | இலக்கம் 420-1-1-2102 செலவு விடயத்தின் எஞ்சிய தொகை, கௌரவ இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் வருடம் முழுவதிலும் இயங்காமையினால் உருவாகியிருந்தது. இலக்கம் 420-1-2-0-2001, 420-1-2-0-2002 மற்றும் 420-1-2-0-2003 ஆகிய செலவு விடயங்கள் நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமை காரணமாக ஒப்பந்தம் வழங்குவதில் சிக்கல் மற்றும் அலுவலக முறையாக இயங்காத காரணத்தால் இந்த செவவுகள் குறைவடைந்து உள்ளது. அவ்வாறே உள்ளூராட்சி தொடர்பில் இலங்கை நிறுவனத்திற்கு மற்றும் அமைச்சிற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாததால் 2401 மற்றும் 2201 இல் நிதி எஞ்சியுள்ளது. | - மேற்படி - |
| (இ) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 02 இன் கீழ் 11 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,240,860,000 நிதியில் ரூபா 1,943.180,815 அதாவது சதவீதமாக 60 சதவீதம் மீதமாகி இருந்தது. | நாட்டில் நிலவிய சீரற்ற சுகாதார நிலைமையின் அடிப்படையில் நாளாந்த நடவடிக்கைகள் வலுவிழந்தமையினால் மற்றும் எதிர்பார்த்த வகையில் வீதி அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது | - மேற்படி - |
| (ஈ) | திறைசேரிக் குறிப்புக்களுக்கமைய 2020 ஆம் ஆண்டில் 420-2-3-19-2506(12) செலவு விடயத்துக்குரிய மொத்த செலவினம் ரூபா 504,074,405 ஆகும். 2019 ஆம் ஆண்டில் அந்த செலவு விடயத்தினை அறிமுகப்படுத்தும் குறியீடு 155-2-3-29-25060-12 என்பதோடு அங்கு | போக்குவத்து தொடர்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவச் செயற்திட்டத்தினால் 2019 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட வேலை தொடங்கும் முற்பணம் ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் கணக்காய்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட | - நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவினம் ரூபா 100,669,665 ஆகும். அந்த குறியீட்டில் அறியப்பட்ட போக்குவரத்து தொடர்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செய்திட்டத்தினால் ரூபா 81,546,770 தொகையான நிலைப்படுத்தல் முற்பணத் தொகை 2019 ஆம் ஆண்டுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் உள்ளடக்கப்பட்டமையால், ஆண்டிற்கான செலவினம் ரூபா 81,546,770 இனால் கூடுதலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டின் உண்மையான செலவினம் ரூபா 585,621,175 ஆக இருக்க வேண்டிய போதிலும் கடந்த ஆண்டில் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையான ரூபா 81,546,771 தொகை செலவு விடயத்தில் மிகைவிதிப்பு செய்யப்பட்ட காரணத்தினால் உண்மையான செலவு ரூபா 81,546,771 இனால் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிவுரைகளுக்கமைய 2020 ஆம் ஆண்டளவில் அந்த முற்பணக் கொடுப்பனவு முற்பணக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. உரிய சீர்படுத்தல் காரணமாக 2019 ஆம் ஆண்டில் கூடுதலாக பற்று வைக்கப்பட்ட செலவினை அகற்றி உள்ளதுடன் மொத்த செலவினம் சரியானது ஆகும். | |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்கீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 மற்றும் 2017 ஏப்பிரல் 27 ஆம் திகதியிலான | அரச கணக்குகள் சுற்றறிக்கை 05/2020 இன் 11 ஆம் பந்தியின் அறிவுறுத்தலுக்கமைய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் | சுற்றிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையில் 02(அ) பந்திக்கமைய தனிநபர் சம்பளம் மற்றும் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுக்காக வருடாந்த வரவு செலவுத் திட்ட எல்லைக்குள் முதலில் கடப்பாட்டினை அறிந்து கொள்ளல் வேண்டும். அந்த சுற்றறிக்கையில் 02(ஆ) இற்கு அமைய அவ்வாறு அறிந்து கொள்ளப்பட்ட கடப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அந்த கடப்பாடுகளுக்கு உரிய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதற்காக கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள தொகை மற்றும் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி பொறுப்பொன்றாக பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அதற்கு முரணாக, இலக்கம் 420-1-2-0-1002 கொண்ட செலவு விடயத்தின் கீழ் ரூபா 527,450 தொகை கடப்பாட்டு மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | சிகாஸ் வேலைத்திட்டத்தினூடாக அமைச்சின் கடப்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்குப் பிரிவிற்கான இலக்கம் 420-1-2-0-1002 செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவிற்காக பணவுறுதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மற்றும் மேற்கூறிய வகையில் சிகாஸ் வேலைத் திட்டத்தினூடாக கடப்பாடு அறிக்கையிடப்பட்டுள்ளதால் இந்த செலவினம் கட்டுப்பாடுகளாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிப் பிரமாணத்தின் அறிவுறுத்தல்களைக் கருத்திற் கொள்ளாது 7 செலவு விடயங்களின் ஒதுக்கீட்டு மீதி ரூபா 119,401,526 இனால் விஞ்சி ரூபா 257,693,824 கடப்பாடு ஏற்பட்டிருந்தது. | கீழே குறிப்பிடப்பட்டுள்ள செலவின விடயங்களுக்காக 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் போதுமான அளவு நிதி எஞ்சியிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் அந்த எஞ்சிய நிதி மிகவும் உற்பத்தித் திறனுடன் பயன்படுத்தக் கூடிய வகையில் நிதி போதுமான அளவு இல்லாத செலவு விடயங்களுக்காக நிதிப் | நிதிப் பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டுள்ளது.

420-2-03-000-1508
420-2-03-000-2202/14
420-2-03-29-2202

அவ்வாறே கீழே குறிப்பிடப்பட்டுள்ள செலவு விடயங்களின் கீழ் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அரச கணக்கீட்டுத் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட கடப்பாடு அறிக்கையில் ஒதுக்கீட்டு எல்லையினை விஞ்சி கடப்பாடு உள்ளடக்கப்படவில்லை.

420-2-03-027-2202
420-2-03-024-2202
420-2-03-000-2202/10
420-2-03-020-2504

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 328 வைப்புக் கணக்கு மீதிகளான ரூபா 91,713,104 அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புகளுள் முக்கியமாக உள்ளடக்கப்படுவது ஒப்பந்த விலைப்பட்டியல்களில் இருந்து கழிக்கப்பட்ட 10 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்ட தொகை என்பதுடன் இந்த தொகையினை விடுவிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்கள் மூலம் உரிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதனால் அந்த செயற்பாட்டிற்காக ஓரளவு காலம் தேவைப்படும் எவ்வாறு இருப்பினும் இது | நிதிப்பிரமாணம் 571(3) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | வரையிலும் காலம் கடந்த அனைத்து வைப்புகளும் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்குத் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதியிலான இலக்கம் 09/2009 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரின் 2017 ஜனவரி 20 ஆம் திகதிய 03/2017/நிர்வாகம் ஆம் இலக்கமுடைய உள்ளகச் சுற்றறிக்கை. | I. திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரவின் பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் 2020 ஏப்ரல் 22 தொடக்கம் செப்டெம்பர் 30 வரையிலும் அவர்களின் சேவைக்கான வருகை மற்றும் வெளியேறலைக் உறுதிப்படுத்த விரல் அடையாள இயந்திர அல்லது வருகைப் பதிவேடு பயன்படுத்தாத போதிலும் அவர்களுக்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ரூபா 1,218,580 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த காலப் பகுதியினுள் அந்த உத்தியோகத்தர்களினால் தமது கடமையினை நிறைவேற்றி உள்ளதானால் அவர்களுக்கு உரித்தான சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. அந்த குறைபாட்டினைத் திருத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (II) மேலதிகச் செயலாளரின் (செயற்றிட்டம்) 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 11 ஆம் திகதி (கணக்காய்வு திகதி) வரையிலும் வருகை மற்றும் வெளியேற்றத்தை உறுதிப்படுத்த விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை | மேற்படி | மேற்படி |
| | | (III) இந்த அமைச்சின் கீழ் செயற்படும் மாகாண வீதி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் முகாமைத்துவ அலகானது, 10 பேரைக் கொண்ட பதவியணி மற்றும் தனிநபர் ஆலோசகர் 04 பேரையும் கொண்டு நடாத்தப்பட்டு வந்த போதிலும் வருகை மற்றும் வெளியேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக சுற்றறிக்கை அறிவுரையின்படி விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்திப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய இலக்கம் 01/2019 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கையின் 2.3.3(c) பிரிவின் பிரகாரம் அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஒரு அபிவிருத்தி செயற்றிட்டத்தில் பதில் கடமை பதவியில் மட்டுமே ஈடுபடுத்த முடியுமான போதிலும் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுக்கு எதிராக இந்த அமைச்சின் கீழ் இயங்கும் புரநெகும செயற்திட்டம், எழுச்சிபெறும் வலயங்களில் கிராமிய | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டம் போன்ற செயற்றிட்டங்களில் முறையே மாகாண செயற்றிட்ட பணிப்பாளர், பிரதி மாகாணச் செயற்றிட்ட பணிப்பாளர் (வீதி மற்றும் நீர்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் போன்ற மூன்று பதிற்கடமை பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு அதில் இரண்டு பதவிகளுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 1,346,109 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு நன்கொடை செயற்றிட்டம் தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாக வருடத்திற்கு 06 செயற்றிட்ட நடவடிக்கைக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், இந்த அமைச்சின் கீழ் செயற்படும் 9 செயற்திட்டங்களில் 2 செய்ற்றிங்களுக்காக 2 கூட்டங்கள் படியாக இடம்பெற்றிருந்ததுடன், ஏனைய செயற்திட்டங்களுக்காக செயற்திட்ட நடவடிக்கைக் குழுக் கூட்டம் ஒன்று வீதம் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | நிலவும் சூழ்நிலைகளில் ஒரு சில சந்தர்ப்பங்களில் செயற்திட்ட நடவடிக்கை குழு நடாத்தல் தாமதமானதால் சரியான முறையில் இந்தக் கூட்டத்தினை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 செப்தெம்பர் 04 ஆம் திகதிய இலக்கம் DMS/SM/10 கொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | புதிய இராஜாங்க அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு எதிராக அந்த பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள மேலதிக செயலாளருக்கு சம்பளத்தின் 50 சதவீதம் அதாவது மாதாந்தம் ரூபா 56,150 வீதம் மற்றும் கொள்முதல் நிபுணருக்கு மற்றும் பொறியில் ஆலோசகருக்கு (நீர்ப்பாசனம்) ஒரு உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 107,000 படியாக் 2020 செப்டெம்பர் மாதம் தொடக்கம் மேலதிக சம்பளமாக ரூபா 1,080,000 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த கொடுப்பனவு வழங்கல் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளதோடு, மேலதிகக் கொடுப்பனவு இருப்பின் அதனை அறிவிடுவதற்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 பெப்ரவரி 05 ஆம் திகதியிலான இலக்கம் 01/2018 கொண்ட வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை. | (i) சுற்றிக்கையில் உப இலக்கம் 1.12 இன் பிரகாரம் சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்கையில் சுற்றிக்கையில் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாக தீர்மானிக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோத்தர்களுக்கு மட்டும் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளருக்கு மற்றும் உள்ளூராட்ச்சி நிறுவன முன்னேற்ற செயற்திட்டத்தின் செயற்திட்டம் பணிப்பாளருக்கு அரச அபிவிருத்தி | மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தில் பணிப்பாளர் 9 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளமை ஆவணங்களை பரீட்சித்து உறுதிப்படுத்தப்பட்டுள் ளது1/2008 சுற்றறிக்கையின் 1.1. மற்றும் 1.12 இற்கு அமைய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவன முன்னேற்ற செயற்திட்டத்தின் பணிப்பாளர் தொடர்பில் கருத்து தெரிவிக்கவில்லை | வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் ஆலோசனை பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்டங்களில் 9 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத போதிலும் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| | | (ii) சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்காக மட்டும் அனுமதிப் பத்திரம் வழங்குதல் அனைத்து செயலாளரிகளினதும் பொறுப்பாகும். என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயலாளர் பொறுப்பை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலக்கம் 01/2013 கொண்ட வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை 01.02 (iv) | உள்ளூராட்சி நிறுவனங்களை முன்னேற்றும் செயற்திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பொருத்தமான உத்தியோகத்தராக சேவையாற்றும் உத்தியோகத்தரின் சேவைக்காலம் பூர்த்தியடைந்து இருந்த போதிலும் இந்தச் சுற்றறிக்கையின் 01.02(iv) ஆம் பந்தியின் பிரகாரம், அரச சேவையில் ஓய்வு பெற்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பெற்றுள்ள பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு நிவாரண அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் உரித்தற்றது என அறிவுறுத்தல் | கருத்து தெரிவிக்கப்படவில்லை | வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் ஆலோசனை பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருக்கவில்லை. மோட்டார் வாகன அனுமதிப் பத்தரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2006 பெறுகைகள் வழிகாட்டி 4.2.1 | எதிர்வரும் 3 வருட காலத்திற்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சிற்காக 155 செலவினத் தலைப்பில் 11 செலவின விடயங்களின் ஒதுக்கீடுகளில் ரூபா 4,764,389 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 செப்தம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் புதிய செலவினத் தலைப்புகளின் கீழ் கணக்கீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 155 செலவினத் தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்ட தொகை கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய தலைப்பு 420 இன் கீழ் செலவிடுவதற்கான அதிகாரம் பெறப்படாது ரூபா 4,764,389 அந்த செலவினத் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரியிலிருந்து பெறப்பட்ட அறிவுரைகளின் படி குறித்த கொடுக்கல் வாங்கல் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதியிலான இலக்கம் 2014/01 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டினை செயற்படுத்தலை முன்னுரிமையாக கொண்டு செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த செயல்கள் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவு மதிப்பீட்டிற்கு உரியதான செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் மிகத் திட்டவட்டமாக செயல்களை இனங்காணுமாறு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கு பின்னைய ஆண்டுகளில் திட்டங்களை வெற்றிகரமாக்குவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அபிவிருத்திப் பிரிவு மற்றும் உள்ளூராட்சிப் பிரிவிற்கு உரியதான நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயல்கள் தீர்மானிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத காரணத்தால் முன்னேற்றத்தை அறிந்து கொள்ள முடியாது இருந்தது. | குறைபாடுகள் இருப்பின் திருத்துவதற்கு தேவையான அறிவுரை வழங்குவதற்கு குறித்துக் கொண்டேன். | சரியான செயற்பாட்டுத் திட்டம் போன்றே அதற்கு ஏற்புடையதான முன்னேற்ற அறிக்கையும் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.3 உத்தேச அடைவு மட்டத்தை பெற்றிராமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் ரூபா 935.69 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 9 கொம்போஸ்ட் இயந்திரங்களில் 4 இயந்திரங்களை பொருத்துவதற்கான கட்டிடங்களின் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் அந்த இயந்திரங்களைப் பாவனைக்கு உட்படுத்தவதற்கு 2021 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் முடியாது இருந்தது. | செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இந்த நிர்மாணம் தாமதமானதுடன் தற்போது அந்த நடவடிக்கைகயை வினைத்திறனுடன் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலப் பகுதியினுள் நிர்மாணத்தினை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) அட்டாளைச்சேனை – அஷ்ரொப் நகரில் பொருத்தப்பட்ட இயந்திரம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் காலி மற்றும் வடமராட்சி ஆகிய இரு நகரங்களில் தாபிக்கப்படப்டுள்ள 02 இயந்திரங்களினதும் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமையினால் தற்காலிகமாக குப்பைகள் கொண்டு வருதல் நிறுத்தப்பட்டுள்ளது. | தொற்று நிலைமையிலும் குப்பைகள் சேகரித்தல் மற்றும் மீள் சுழற்சி செய்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 எதிர்பார்த்த வெளியீட்டினை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 9 கொம்பேஸ்ட் இயந்திரங்களுள் 5 இயந்திரங்கள் கொம்பேஸ்ட் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அந்த இயந்திரங்கள் மூலம் நாளொன்றுக்கு எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டமான 50 டொன் குப்பைகளைப் பயன்படுத்தி 17 டொன் கொம்பேஸ்ட் உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பரீட்சிப்பதற்கு குறித்துக் கொண்டேன் | முதலீடு செய்யப்பட்ட தொகையில் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை கைப்பற்றிக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கொம்போஸ்ட் இயந்திரத்தினால் வருடாந்தம் ரூபா 80 மில்லியன் நிதி பெறுபேறு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறான நிதி பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கொம்பேஸ்ட் இயந்திரம் தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் குப்பை பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதே என்பதுடன் நிதி பெறுபேறு அதன் உப பிரதிபலனேயாகும். | - மேற்படி - |
| (இ) | லங்காபுர, தம்புள்ள மற்றும் குருணாகல் ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்ட கொம்போஸ்ட் உற்பத்தி இயந்திரங்களுக்கு முறையே குப்பை 40, 25 மற்றும் 30 டொன் அளவில் கிடைப்பதுடன், தினசரி உர உற்பத்தி 6-8 டொன், 5-6 டொன் மற்றும் 4-5 டொன்னுக்கு இடைப்பட்ட அளவு அறிக்கையிடப்பட்ட போதிலும் இலக்கிடப்பட்ட அளவினை எட்டுவதற்கு ஒரு இயந்திரத்திற்குக் கூட முடியாது இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அம்பாந்தோட்டை – கேலியபுரம் மற்றும் கேகாலை ஆகிய 02 இடங்களில் தாபிக்கப்பட்ட இயந்திரங்களுக்கு நாளாந்தம் கிடைக்கும் குப்பையின் அளவு மிகக் குறைந்த அளவில் காணப்படுவதுடன் அந்தந்த தொகை முறையே 2-3 டொன் மற்றும் 7 டொன் ஆக உள்ளது அந்த 02 இயந்திரங்களிலும் கொம்பேஸ்ட் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொம்பெஸ்ட் உற்பத்திக்குப் போதுமான அளவில் குப்பை கிடைக்காமை | - மேற்படி - |
| (உ) | கொம்பெஸ்ட் உற்பத்தியினை முன்னேற்றுவதற்காக இது வரை கொள்வனவு செய்து தாபிக்கப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு மேலதிகமாக மேலும் 12 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. தாபிக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்படுகையில் மேலும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் பொருளாதாரமற்ற செலவாக அமைப்பதற்கு இடமளிக்கக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தவற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களில் எதிர்பார்ககப்பட்ட பிரதியினைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்படாது கைவிடல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **சிவனடி பாத மலை வாடிவீடு** | | |
| | சிவனடிபாத மலை புண்ணிய பூமியில் நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்ட வாடி வீட்டிற்காக ரூபா 54.59 மில்லியன் மதிப்பீடு 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டதால் தற்போது செயற்திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. | செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சரியான தகவல்கள் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களைக் கொண்டு செல்லுவதில் உள்ள சிரமங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாத காரணத்தால் பின்னர் பொருட்களைக் கொண்டு செல்லும் சிரமங்களின் அடிப்படையில் மதிப்பீடு ரூபா 182.99 மில்லியன் வரையில் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இந்த செயலினை 2020 ஆம் ஆண்டு செயற்பாட்டு திட்டத்திலும் கூட உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. | | |
| **(ஆ)** | **மடு தேவாலயத்தை அண்மித்த வாடி வீடு**<br>ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதி பற்றாக்குறையின் அடிப்படையில் செயற்படுத்தப்படவில்லை என்பது முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியானது | அபிவிருத்தி செயற்பாடுகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(இ)** | **கோனேஸ்வரம் வாடி வீடு**<br>2020 ஆம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் செயன்முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. | நிதி ஒதுக்கப்படாமையின் அடிப்படையில் நிறுத்தப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு சரியான தகவல்கள் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஈ) | பெலியந்த நகர வசதிகள் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக முற்பணத் தொகையாக 2013 ஆம் ஆண்டில் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 68 மில்லியன் செலுத்தப்பட்டு இருந்த போதிலும் எதுவிதமான நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் பின்னர் நிதி கிடைக்காத காரணமாக செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாத போதிலும் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய செயல்களுக்குரிய ரூபா 1.1 மில்லியனான | கிடைக்க வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பது அவதானிக்கப்பட்டது. | விலைப்பட்டியல் கட்டிடத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படவில்லை. மீதித் தொகையான ரூபா 66.8 மில்லியன் இன்னமும் அறவிட வேண்டி உள்ளது. கிராமிய பாலம் செயற்திட்டத்திற்குத் தேவையான களஞ்சியசாலைக்காக கூட்டுத்தாபனத்தினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ள ரூபா 25.95 மில்லியனைத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.6 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) அநுராதபுரம் வசதி மத்திய நிலையம்** | | |
| பௌதீக முன்னேற்ற அறிக்கைக்கு அமைய முன்னேற்றம் நூற்றுக்கு 100 சதவீதம் வரையிலும் இருந்த போதிலும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | பிரதான ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், நிலவும் சூழ்நிலையில் குழாய் கிணற்றிற்குத் தேவையான மோட்டரைக் கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளமையால் அந்த செயற்பாடு மட்டுமே தாமதமாகியுள்ளது. | சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| **(ஆ) மட்டக்களப்பு நூலகம்** | | |
| பொது மக்கள் நூலகக் கட்டிடத்தில் எஞ்சியுள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 169.97 மில்லியன் நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு 2018 செப்தெம்பர் 19 ஆம் திகதி இலக்கம் 18/2053/805/064 கொண்ட அமைச்சரவை பத்திரத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த | இது வரையிலும் குறித்த செயற்திட்டம் கையளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | அபிவிருத்தி செயற்பாடுகள் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட வேண்டும். |

செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைக்காக கட்டிடத் திணைக்களம் நியமிக்கப்பட்டிருந்துடன் அந்தத் திணைக்களம் சமர்ப்பித்த மொத்த செலவு மதிப்பீடு ரூபா 345 மில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கை மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளராட்ச்சி அமைச்சின் கீழ் ரூபா 100 மில்லியன் நிதியில் ரூபா 50 மில்லியன் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியில் செலவிடப்பட்ட தொகை ரூபா 148,017 ஆகும். 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 10 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு அந்தத் தொகை கூட்டத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு பௌதீக முன்னேற்ற அறிக்கைக்கு அமைய ஒப்பந்தம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டில் கூட கட்டிடதின் நிர்மாணங்களில் முன்னேற்றமின்றி காணப்படவில்லை

**3.7 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **பொது கல்வி புத்தாக்கல் செயற்திட்டம் (GEM)**<br>உலக வங்கியின் கடனால் நிதியிடப்படும் பொது கல்வி புத்தாக்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு ரூபா 3 மில்லியனும், 9 மாகாணங்களுக்கு ரூபா 400 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், திறைசேரி அச்சுப் பிரதி குறிப்பிற்கமைய ஆண்டின் மொத்த செலவினம் ரூபா 310.92 மில்லியன் ஆகும். எனினும் செயற்திட்டத்திற்கான நிதிக்கூற்றுக்கள் அல்லது செயற்திட்டத்திற்கு உரிய எந்த விதமான தகவலும் கண்க்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த செயற்திட்டத்திற்கு உரிய 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வு ஆண்டிற்கான முழுமையான நிதிக் கூற்றுத் தொகுதி மற்றும் செயற்திட்டத்திற்கு உரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) பிரதேச அபிவிருத்தி துணைச் செயற்திட்டம் (LDSP)**

| | | | |
|---|---|---|---|
| I. | செயற்திட்டத்தின் இரண்டாவது கணக்கீட்டு ஆண்டான 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் இந்தச் செயற்திட்டத்துக்காக ரூபா 650.70 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் ஆண்டிற்கான செலவு ரூபா 60.54 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டமையால், ஆண்டில் 9.30 சதவீதம் அளவிலான மிகக் குறைவான நிதி முன்னேற்றத்தை மட்டுமே கைப்பற்றக் கூடியதாக இருந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த கட்டு நிதியினை ஆண்டினுள் வருவித்துக் கொள்ள முடியாததன் ஆண்டினுள் செயற்திட்டத்தில் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு மட்டத்தினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| II. | முழு நேர செயற்திட்ட பணிப்பாளரைக் கொண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகு இதுவரையிலும் தாபிக்கப்படடிருக்காததுடன் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பதிற்கடமை பணியாளராகவும் சேவையாற்றும் இந்த அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) இந்தச் செயற்திட்டத்தின் பணிப்பாளராக கடமை புரிகின்றனர். மேலும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிலை நடவடிக்கைகளுக்கு பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட பதவியணியினரை செயற்திட்ட முகாமைத்துவ அலகின் நடவடிக்கைக்காகவும் இணைக்கப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதிக்கு அமையவே இது வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் செயலாற்றல் மட்டத்தினைப் பேணுவதற்காக தகைமையின் படி பதவியணியினரை நியமித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
